## ஒரு பார்வை - பகுதி 1

**அல்லாஹ் அநாகரீகமான செயல்கள், தீமை, எல்லை மீறல் ஆகியவற்றுக்கு தடை விதித்து, நீதி, கருணை மற்றும் வாக்குறுதிகளை நிலைநாட்ட கட்டளையிடுகிறான். உள்ளமெல்லாம் ஈமானால் நிரம்பியிருக்கின்ற நிலையில் எவர் இறைமறுப்புக்காக நிர்பந்திக்கப்படுகிறாரோ அவர் மீது குற்றமில்லை. உங்களுடைய ஞானத்தாலும், சிறந்த அறிவாலும் மக்களை மிகவும் கண்ணியமான முறையில் அல்லாஹ்வின் பாதைக்கு அழையுங்கள்.**

## தராவிஹ் - 12: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 16, அந்நஹ்ல்; வசனம்: 90 - 128; பிரிவு: 13-16

1. **நீதமாக நடந்துகொள்ள வேண்டுமென்றும், நன்மையான செயல்கள் செய்ய வேண்டுமென்றும், உறவினர்களுக்குக் கொடுத்து உதவவேண்டும்மென்றும் அல்லாஹ், கட்டளையிடுகின்றான். அநாகரீகமான செயல்கள், தீமை, எல்லை மீறல் ஆகியவற்றுக்கு அவன் தடை விதிக்கிறான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 13)**

2. **அல்லாஹ்வின் பெயரால் உங்களுக்கு மத்தியில் நீங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறிக்காதீர்கள். அதில் அல்லாஹ்வை உங்களுக்குப் பொறுப்பாளனாக ஆக்கியுள்ளீர்கள். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 13)**

3. **அல்லாஹ்வை ஈமான் கொண்டதற்கு பிறகு அவனை யார் நிராகரிக்கிறார்களோ அவர்கள்மீது அல்லாஹ்வின் கோபம் ஏற்படும். அவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு. ஆனால் உள்ளமெல்லாம் ஈமானால் நிரம்பியிருக்கின்ற**

நிலையில் எவர் இறைமறுப்புக்காக நிர்பந்திக்கப்படுகிறாரோ அவர் மீது குற்றமில்லை. (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 14)

4. உங்களில் யாரேனும் பன்றி இறைச்சியை அல்லது தடை செய்யப்பட்ட பொருட்களை உண்ண வேண்டுமென்று நிர்பந்திக்கப்பட்டால் அவர் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ், மன்னிக்ககூடியவனும், கிருபையாளனுமாக இருக்கின்றான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 15)

5. அல்லாஹ் என்பவன், யார் அறியாமல் தவறு செய்து விட்டு பிறகு பாவமன்னிப்புக் கோரி தம்மை சீர்திருத்திக்கொண்டார்களோ அவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றான். அதற்குப் பிறகும் அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், கருணையாளனாகவும் இருக்கிறான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 15)

6. இப்ராஹீம் (அலை) அவர்கள், ஒரு முன் மாதிரியாகவும் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடக்ககூடியவராகவும் உண்மை வழியில் நிற்பவராகவும் திகழ்ந்தார். அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு எப்போதும் நன்றி செலுத்துகின்றவராக இருந்தார். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 16)

7. அல்லாஹ், அவருக்கு இந்த உலகத்தில் நல்ல வாழ்க்கையை கொடுத்தான்; மற்றும் மறுமை நாளிலும் நல்லவர்களுடன் இருக்கச் செய்வான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 16)

8. உங்களுடைய ஞானத்தாலும், சிறந்த அறிவாலும் மக்களை அல்லாஹ்வின் வழிக்கு அழையுங்கள். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 16)

9. பொறுமையுடன் இருங்கள். அல்லாஹ்வின் உதவியினால்தான் நீங்கள் பொறுமை செய்ய முடியும். அவர்களுக்காக நீங்கள் வருந்தாதீர்கள். அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளால் உங்களை நீங்கள் வருத்திக் கொள்ளாதீர்கள். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 16)

10. **நிச்சயமாக யார் இறையச்சம் கொண்டு நற்செயல் செய்வோர்களாக இருக்கிறார்களோ, அவர்களுடனும் அல்லாஹ் இருக்கிறான். (ஸூரா - அந்நஹ்ல்**; **பிரிவு:** 16)

## ஒரு பார்வை - பகுதி 2

அல்லாஹ் தன்னுடைய அத்தாட்சியை காண்பிப்பதற்காக, தன் அடியாரான நபி முஹம்மது (ஸல்) அவர்களை ஓர் இரவில் அழைத்துச் சென்றான் (மிஃராஜ் பயணம்). மறுமை நாளில், ஒவ்வொருவரும் தங்கள் செய்த செயல்கள் எழுதப்பட்ட வினைச் சீட்டின் மூலம் கணக்குக் கேட்கப்படுவார்கள். இவ்வுலக வாழ்க்கைக்கு ஆசைப்படாமல், மறுமையைத் தேடுங்கள். உங்கள் சக்திக்கு ஏற்றவாறு தர்மம் செய்யுங்கள். விபச்சாரம் செய்யாதீர்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், கர்வம் கொள்ளாதீர்கள்.

## தராவிஹ் - 12: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 17, பனீஇஸ்ராயீல்; வசனம்: 1 - 52; பிரிவு: 1 - 5

1. அல்லாஹ் தூய்மையானவன். அவன் தன்னுடைய அத்தாட்சியை காண்பிப்பதற்காக, தன் அடியாரான நபி முஹம்மது (ஸல்) அவர்களை மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா வரை ஓர் இரவில் அழைத்துச் சென்றான். (இதுவே மிஃராஜ் பயணமாகும்.) (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 1)

2. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வினைச் சீட்டை அவனுடைய கழுத்தில் நாம் மாட்டியுள்ளோம். மறுமை நாளில் அவனுக்காக ஓர் ஏட்டை நாம் வெளியிடுவோம்; அதனை விரிக்கப்பட்டதாக அவன் காணுவான். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 2)

3. “உனது ஏட்டை நீயே படித்துப் பார்! இன்று உனக்கு கணக்குப் பார்க்க நீயே போதும்” என்று கூறப்படும். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 2)

4. அழியக்கூடிய இவ்வுலகத்தில் ஆசைப்படாமல், மறுமை வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, அதற்கு முடிந்தவரை முயற்சி செய்வது பாராட்டுக்குரியது ஆகும். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 2)

5. உங்கள் மனதில் இருப்பதை உங்கள் இறைவனே நன்கு அறிவான். நீங்கள் நல்லவராக இருந்தால், திருந்தி தன்னிடம் வருவோரை அவன் மன்னிப்பவனாக இருக்கின்றான். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 3)

6. நீங்கள் அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்திருந்தால், (தேவையடையவர்களுக்கு) வழங்குவதற்கு உங்களிடம் ஏதும் இல்லையென்றால், அவர்களிடத்தில் ஆறுதலான வார்த்தை கூறுங்கள். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 3)

7. நீங்கள் கஞ்சத்தனமாகவோ, ஆடம்பரமாகவோ செலவு செய்யாதீர்கள். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 3)

8. நிச்சயமாக உம்முடைய இறைவன், தான் நாடியவர்களுக்கு வாழ்வாதாரத்தை தாராளமாக வழங்குகிறான். தான் நாடியவர்களுக்கு அளவோடு வழங்குகிறான். நிச்சயமாக அவன் தன் அடியார்களை நன்கு அறிந்தவனாகவும், கூர்ந்து பார்க்கின்றவனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 3)

9. நீங்கள் விபச்சாரத்தின் பக்கம் நெருங்காதீகள்; நிச்சயமாக அது மானக்கேடானதாகவும், மிகத் தவறான வழியாகவும் இருக்கிறது. (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 4)

10. வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்றுங்கள்; நிச்சயமாக வாக்குறுதி விசாரணை செய்யப்படக் கூடியதாக இருக்கிறது. (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 4)

11. நீங்கள் அளவு, நிலுவைகளில் சரியாக நடந்து கொள்ளுங்கள். அது அழகிய முடிவைத் தேடித் தரும். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 4)

12. எதைப்பற்றி உமக்குத் தீர்க்கமான அறிவு இல்லையோ, அதனை பின்பற்ற வேண்டாம். நிச்சயமாக செவி, பார்வை, இதயம் இவை ஒவ்வொன்றையும் பற்றி மறுமை நாளில் உங்களிடம் விசாரிக்கப்படும். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 4)

13. பூமியில் நீ ஆணவத்தோடு நடக்காதே; இவை அனைத்தும் பாவமானவை; அல்லாஹ்வால் வெறுக்கப்பட்டவை. (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 4)

14. ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவை யாவும் அவனை - தஸ்பீஹ் - துதிக்கின்றன. எந்த பொருளும் அவனைத் துதிக்காமல் இல்லை. அவற்றின் தஸ்பீஹை நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்கள். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 5)

## ஒரு பார்வை - பகுதி 3

**நீங்கள் பேசும் பொழுது நல்லதையே பேசுங்கள். ஷைத்தான் மக்களுக்கு மத்தியில் குழப்பம் செய்திடுவான்; அவன் மனிதனுக்கு பகிரங்கமான விரோதியாக இருக்கிறான். ஐந்து நேர தொழுகைகளை நிலைநிறுத்துங்கள். தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது வாருங்கள். இந்தக் குர்ஆன் சத்திய வேதமாகும். மேலும் இது இறைநம்பிக்கையாளர்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளது.**

## தராவிஹ் - 12: (ரக்அத் 9 முதல் 12)

## ஸூரா - 17, பனீஇஸ்ராயீல்; வசனம்: 53 - 100; பிரிவு: 6 - 11

1. **நீங்கள் பேசும் பொழுது நல்லதையே பேசுங்கள்; நிச்சயமாக ஷைத்தான் மக்களுக்கு மத்தியில் குழப்பம் செய்திடுவான்; அவன் மனிதனுக்கு பகிரங்கமான விரோதியாக இருக்கிறான். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 6)**

2. **ஆதம் (அலை) அவர்களுக்கு தலை வணங்காத இப்லீசின் நிகழ்வு கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் ஆதமுக்கு "ஸுஜூது செய்யுங்கள்" என்று கூறிய போது, இப்லீஸ் அதை மறுத்துவிட்டான். அதனால் அல்லாஹ் அவனை சபித்து, மறுமையில் அவனுக்கும், அவனை பின்பற்றுபவர்களுக்கும் நரகத்தை சொந்தமாக்கினான். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 7)**

3. **ஷைத்தான் மக்களை, அவனின் கவர்ச்சி மிக்க குரலால் வழி தவறச் செய்வான். ஏமாற்றுதல் என்பது ஷைத்தானின் வாக்குறுதி. (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 7)**

4. **அல்லாஹ்வின் நல்லடியார்களின் மீது ஷைத்தானுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவர்களுக்கு பொறுப்பாளியாக இருக்க அல்லாஹ் போதுமானவன். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 7)**

5. "நபியே! சூரியன் உச்சியில் சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் சூழும் வரை (ளுஹ்ரு, அஸர், மஃரிப், இஷா) தொழுகையை நிலை நிறுத்துவீராக! மேலும், அதிகாலை பஜ்ருடைய தொழுகையும் நிலை நிறுத்துவீராக! அதில் ஓதப்படும் குர்ஆன் (மலக்குகளால்) சாட்சி கூறப்படுவதாக இருக்கிறது". (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 9)

6. இரவின் ஒரு பகுதியில் குர்ஆனை ஓதிக் கொண்டு தஹஜ்ஜத் தொழுவீராக! நபியே! அதனைக் கொண்டு, உம்முடைய இறைவன் உம்மை (மகாமன் மஹ்மூதா) - புகழுக்குரிய இடத்தில் வைப்பான். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 9)

7. (நபியே!) "சத்தியம் வந்தது. அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியமானது அழிந்து போவதேயாகும்" என்று கூறுவீராக! (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 9)

8. நாம் இந்த குர்ஆனில் இறைநம்பிக்கையாளர்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளவற்றை இறக்கிவைத்தோம். ஆனால் அநீதியாளர்களுக்கு இழப்பைத் தவிர வேறெதையும் இது அதிகமாக்காது. (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 9)

9. இதுதான் அவர்களுக்குரிய தண்டனை. ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்தனர். மேலும் "நாங்கள் இறந்து எலும்புகளாகி, உக்கி மண்ணோடு மண்ணாகிவிட்ட பின்பு, மீண்டும் உயிர் கொடுத்து, புதியதொரு படைப்பாக எழுப்பப்படுவோமா?" என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 11)

10. நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைத்தவனாகிய அல்லாஹ், அவர்களைப் போன்றவர்களை (மீண்டும்) படைக்க ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் அறியவில்லையா? அல்லாஹ் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட தவணையை

ஏற்படுத்தியுள்ளான். அதில் எந்த சந்தேகமும் இல்லை. (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 11)

11. எனினும், அநீதியாளர்கள் உண்மையை மறுப்பதை தவிர எதுவும் செய்வதில்லை. (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 11)

## ஒரு பார்வை - பகுதி 4

**அல்லாஹ் மக்களுக்கு தெளிவுடன் விளக்க, குர்ஆனைப் பல கட்டங்களாக இறக்கினான். குர்ஆனை அறிந்திருந்த யூத, கிறிஸ்தவர்கள் அது ஓதிக் காட்டப்பட்டால் ஸுஜூது செய்தவர்களாகப் பணிந்து முகங்குப்புற விழுவார்கள். ஸூரா அல்கஹ்ஃப், குகைத் தோழர்கள் பற்றிய வரலாறுடன் தொடங்குகிறது. அவர்கள் தங்கள் ஈமானைப் பாதுகாக்க குகையின் பக்கம் தஞ்சம் அடைந்தார்கள்.**

## தராவிஹ் - 12: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 17, பனீஇஸ்ராயீல்; வசனம்: 101 - 111; பிரிவு: 12

1. **நபியே! நீர் மக்களுக்கு இடைவெளிவிட்டு ஓதிக் காட்டுவதற்காகவே இந்த குர்ஆனைப் பிரித்து, சிறிது சிறிதாக அருளினோம். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 12)**

2. **இதற்கு முன் வேதஅறிவு கொடுக்கப்பட்டோரிடம் (அதாவது, யூத மற்றும் கிறிஸ்தவர்களிடம்) இந்த குர்ஆன் ஓதிக் காட்டப்பட்டால் ஸுஜூது செய்தவர்களாகப் பணிந்து முகங்குப்புற விழுவார்கள். மேலும், “எங்கள் இறைவன் மிகப் பரிசுத்தமானவன். எங்களுடைய இறைவனின் வாக்குறுதி நிறைவேறி விட்டது” என்றும் அவர்கள் கூறுவார்கள். (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 12)**

3. **அவர்கள் அழுதுகொண்டே முகம் குப்புற விழுவார்கள். அது அவர்களுடைய உள்ளச்சத்தை மேலும் அதிகமாக்கும். <u>(ஸஜ்தா - 4).</u> (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 12)**

4. **உங்களுடைய தொழுகையில் நீங்கள் அதிக சப்தமிட்டு ஓத வேண்டாம். மிக மெதுவாகவும் ஓத வேண்டாம். இவற்றிற்கிடையே நடுநிலையைக் கடைப்பிடிப்பீராக! (ஸூரா - அல்இஸ்ரா; பிரிவு: 12)**

## ஸூரா - 18, அல்கஹ்ஃப்; வசனம்: 1 - 31; பிரிவு: 1 - 4

5. புகழ் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியது! அவன்தான் குர்ஆனை இறக்கி வைத்தான், அதில் எவ்வித கோணலும் (முரண்பாடும்) இல்லை. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 1)

6. குகை தோழர்கள் மற்றும் அர்ரகீம் வரலாறு பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 2)

7. அல்லாஹ் அந்த இளைஞர்களுக்கு நேர்வழியை அதிகப்படுத்தி அவர்களின் மனதில் தைரியத்தை ஊட்டினான். பின் அவர்கள் எழுந்து நின்று “அல்லாஹ்வை தவிர வேறு எவரையும் அழைக்க மாட்டோம்” என்று முடிவு செய்தார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 2)

8. அவர்கள் மற்ற கடவுள்களை வழிபடவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டபோது, “நாங்கள் அல்லாஹ்வை தவிர வேறு யாரையும் வணக்க மாட்டோம்” என பகிரங்கமாக கூறினர். பொல்லாதவர்கள் அல்லாஹ்வை பற்றி பொய் சொல்லி திரிகின்றனர். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 2)

9. இதனால், அவர்கள் ஊரை விட்டு விலகி, குகையின் பக்கம் தஞ்சம் அடைந்தார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 2)

10. நீங்கள் அவர்களைப் பார்த்தால் விழித்திருப்பவர்களாக எண்ணுவீர்கள். ஆனால் அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும், அவர்களுடைய நாய் அந்த குகையின் வாசலில் முன்னங்கால்களை நீட்டி படுத்திருந்தது. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 3)

11. அவர்கள் விழித்த பொழுது, ஒரு நாளோ அல்லது பாதி நாளோ உறங்கியதாக அவர்கள் நினைத்தனர். மேலும் அவர்களில் ஒருவரை அருகிலுள்ள ஊரின் பக்கம் ஒரு வெள்ளி நாணயத்துடன் அனுப்பி, கவனத்துடன் சென்று, சாப்பிடுவதற்காக நல்ல உணவை வாங்கி வரச் சொன்னர். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 3)

12. அல்லாஹ் அந்த ஊரைச் சார்ந்த மக்களிடம் அவர்களைப் பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்திவிட்டான். அதன் மூலம், அவர்கள், மறுமை நாளைப் பற்றிய அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மை என்றும், அதில் எந்த சந்தேகமும் இல்லை என்றும் அறிந்துகொள்ள முடியும். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 3)

13. குகைவாசிகள், மூவர், அல்லது ஐவர் அல்லது ஏழு நபர் என்றெல்லாம் அவர்கள் விவாதித்தனர். அந்த எண்ணிக்கையை அல்லாஹ் மட்டுமே நன்கறிந்தவன். அவர்களின் எண்ணிக்கையைப் பற்றி மேலோட்டமாக மட்டுமே நீங்கள் விவாதம் செய்யலாம். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 3)

14. எதைப் பற்றியும் “நிச்சயமாக நான் அதை நாளைக்குச் செய்துவிடுவேன்” என்று கூறவேண்டாம். இன்ஷா அல்லாஹ்! (அல்லாஹ் நாடினால்!) என்பதைச் சேர்த்தே கூற வேண்டும். அவ்வாறு சொல்ல மறந்து விட்டால் அல்லாஹ்வை நினைவு கூறுவீராக! மேலும், “என் இறைவன் எனக்கு இதைவிட நெருக்கமான நல்வழியைக் காட்டக்கூடும்” என்றும் கூறுவீராக! (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 4)

15. “குகைவாசிகள் 309 வருடங்கள் குகையினுள் தூங்கினார்கள்” என்று கூறுகின்றனர். ஆனால், அல்லாஹ் ஒருவனே அதனை அறிந்தவன். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 4)

16. காலையிலும், மாலையிலும் தங்களுடைய இறைவனை அழைத்துக் கொண்டிருப்பவர்கள், அவனுடைய திருமுகத்தை நாட்டம் கொண்டிருப்பவர்கள் ஆகியோர்களுடன் பொறுமையுடன் நீரும் சேர்ந்திருப்பீராக! இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை விரும்பி, நீர் அவர்களை விட்டும் உம்முடைய இரு கண்களை வேறுபக்கம் திருப்பி விடாதீர்! (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 4)

17. இந்த வேதத்தை மறுக்கும் அநியாயக்காரர்களுக்கு, நரக நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 4)

18. அந்நெருப்பின் சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் தண்ணீர் கேட்டு கூச்சலிட்டால், உருக்கப்பட்ட செம்பு போன்ற திரவமே கொடுக்கப்படும். அது அவர்களின் முகங்களை சுட்டெரித்துவிடும். அது மிகக் கேடான பானமாகும். அவர்கள் இருக்கும் இடம் மிகக் கெட்ட நரகமாகும். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 4)

19. நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்கிறார்களோ, அவர்களுக்கு என்றென்றும் தங்கியிருக்கக் கூடிய சுவனபதிகள் உண்டு. அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 4)

20. அவர்களுக்கு அங்கு பொற்காப்புகள் அணிவிக்கப்படும். பச்சை நிற பட்டாடைகளை அவர்கள் அணிந்திருப்பார்கள். அங்குள்ள உயர்ந்த ஆசனங்களின் மீது சாய்ந்து, மகிழ்ந்து இருப்பார்கள். அவர்களுடைய வெகுமதிகள் மிகவும் பாக்கியமானவை. அவர்கள் இளைப்பாறும் இடமாகிய சுவனம் மிக அழகானது. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 5

**தோட்டங்கள் கொடுக்கப்பட்ட இரண்டு மனிதர்களின் வரலாற்றை அல்லாஹ் விவரிக்கிறான். இறைநம்பிக்கை இல்லாத உலக வாழ்க்கை எவ்வளவு பயனற்றது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. ஆதம்(அலை) அவர்களுக்கு சஜ்தா செய்ய மறுத்து, அல்லாஹ்வின் கட்டளையை மீறிய இப்லீஸை எப்படி உங்களின் பாதுகாவலர்களாக ஏற்றுக் கொள்வீர்கள்? என்று அல்லாஹ் கேள்வி எழுப்புகிறான். ஹிழ்ரு (அலை) அவர்களிடம் கற்றுக்கொள்ள மூஸா (அலை) மேற்கொண்ட பயணத்தின் வரலாறு, மூஸா (அலை) அவர்களின் பொறுமையின்மை மற்றும் ஹிழ்ரு (அலை) செயல்களுக்குப் பின்னால் இருந்த ஆழ்ந்த ஞானம் ஆகியவை விவரித்துக் கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 12: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 18, அல்கஹ்ஃப்; வசனம்: 32 - 74; பிரிவு: 5 - 10

1. **நபியே! அவர்களுக்கு நீர் இரண்டு மனிதர்களை எடுத்துக்காட்டாகக் கூறுவீராக! (இறைநம்பிக்கை இல்லாத உலக வாழ்க்கை எவ்வளவு பயனற்றது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது). (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 5)**

2. **ஒரு காலத்தில் இரு மனிதர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவருக்கு அல்லாஹ் அதிகமான செல்வத்தை வழங்கியிருந்தான். இரண்டு தோட்டங்களையும், அவ்விரண்டிற்கும் நடுவில் நீரோடையையும் அவருக்கு வழங்கியிருந்தான். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 5)**

3. **அவர் தம் தோழரிடம், 'நான் உன்னைவிட அதிகமான செல்வமும், கூடுதல் ஆள்பலமும் மிக்கவன்' என்று இறுமாப்புடன் கூறிவந்தான். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 5)**

4. அதை செவிமடித்த தோழர் அவரை எச்சரித்தார். அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு மாறு செய்யலாகாது., அவனின் நாட்டப்படியே அத்தோட்டங்கள் கிடைத்தன என்பதை அவருக்கு நினைவு படுத்தினார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 5)

5. மேலும் அவர் கூறினார்: "பொருட்செல்வத்திலும், மக்கட்செல்வத்திலும் நான் உன்னைவிடக் குறைந்தவன் என்று நீ கருதலாம். இருந்தாலும், உன்னுடைய தோட்டத்தைவிட மேலானதை என் இறைவன் எனக்கு வழங்கி. உன் தோட்டத்தின் மீது வானத்திலிருந்து இடிகளை அனுப்பி அதை அழிக்கக்கூடும் அல்லது அதன் நீர் முழுதுமாக வற்றி தரிசாக ஆகிவிடலாம்". (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 5)

6. அல்லாஹ் அவருடைய தோட்டத்தை அழித்தான். அதற்காக தான் செலவு செய்ததைக் குறித்து வருந்தியவனாக இரு கைகளையும் பிசைந்து கொண்டிருந்தார். அத்தோட்டம் வேரோடு சாய்ந்து விட்டது. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 5)

7. அதன் பிறகுதான் அவன் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தான். பின் அல்லாஹ் மட்டுமே பாதுகாக்கக் கூடியவன் என்பதை உணர்ந்தான். இதுவே அவனுக்கு சிறந்த வெகுமதியும், சிறந்த கூலியும் ஆகும். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 5)

8. பொருட்செல்வமும், மக்கட்செல்வமும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களாகும். ஆனால் நிலையான நல்லறங்களே அல்லாஹ்வின் சிறந்த வெகுமதியையும், சிறந்த எதிர்பார்ப்பையும் தரத்தக்கவை ஆகும். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 6)

9. இறுதி தீர்ப்பு நாளுக்கு தயாராகிக் கொள்ளுங்கள். அந்நாளில் மலைகள் இடம்பெயர்ந்து விடும். பூமி வெட்ட வெளியாகிவிடும். அந்நாளில் அனைவரும் ஒரு இடத்தில்

ஒன்று திரட்டப்பட்டு, இறைவனிடம் வரிசையாகக் கொண்டு வரப்படுவார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 6)

10. அந்நாளில், செயல் பதிவேடு அவர்களுக்கு முன்னே வைக்கப்படும். அதிலுள்ளதைக் கண்டு குற்றவாளிகள் மிக்க அச்சத்துடன் இருப்பதை (நபியே!) நீர் காண்பீர்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 6)

11. அவர்கள், “எங்களுக்கு நேர்ந்த கேடே! இந்த பதிவேட்டிற்கு என்ன நேர்ந்தது? சிறியதோ, பெரியதோ எதையும் விட்டுவைக்கவில்லையே!” என்று கூறுவார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 6)

12. இப்லீஸ், ஆதம் (அலை) அவர்களுக்கு சஜ்தா செய்ய மறுத்ததை நினைவு கூறுகிறான். அல்லாஹ்வுக்கு பகரமாக இப்லீஸையும், அவனின் சந்ததிகளையுமா உங்களின் பாதுகாவலர்களாக ஏற்றுக் கொள்வீர்கள்? அவர்களோ உங்களுக்குப் பகைவர்களாக இருக்கிறர்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 7)

13. அல்லாஹ் குர்ஆனில் அனைத்து உவமானங்களையும், மக்கள் அறிந்து கொள்வதற்காக எடுத்துரைத்துள்ளான், ஆனால் மனிதன் அதிகமாக விதண்டாவாதம் செய்பவனாகவே இருக்கிறான். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 8)

14. மூஸா (அலை) மற்றும் ஹிழ்ர் (அலை) அவர்களின் வரலாற்று நிகழ்வுகள்: அல்லாஹ் ஹிழ்ர் (அலை) அவர்களுக்கு தன் சிறப்பு ஞானத்தைக் கற்பித்திருந்தான். அவரிடமிருந்து கற்றுக்கொள்ள மூஸா (அலை) சென்றார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 9)

15. மூஸா (அலை) தம் பணியாளருடன் பயணம் செய்தார்கள். அவ்விருவரும் இரண்டு கடல்கள் ஒன்று சேரும் இடத்தை

அடைந்தபோது, அவர்கள் கொண்டு வந்த மீன், கடலில் அதிசயமான பாதையில் மறைந்து விட்டது. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 9)

16. அவ்விருவரும், அந்த இடத்தைக் கடந்த போது, தான் கொண்டுவந்த உணவை சாப்பிட ஆயத்தமானார்கள். அப்போது அந்த பணியாள், “அந்தப் பாறையில் நாம் தங்கிய சமயத்தில் நான் மீனை மறந்து விட்டேன். அது கடலில் தன்னுடைய வழியைச் சுரங்கம் போல் அமைத்துக்கொண்டு மறைந்து விட்டது. அதை நான் உங்களிடம் சொல்லவில்லை. ஷைத்தான் என்னை மறக்கடித்து விட்டான்" என்று கூறினார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 9)

17. தாம் செல்லவேண்டிய இடம் அது தான் என்று கூறி, மூஸா (அலை) அந்த இடத்துக்கு திரும்ப சென்றார்கள். அங்கு அல்லாஹ்வால் சிறப்பான ஞானம் வழங்கப்பட்ட, ஹிழ்ர் (அலை) அவர்களை சந்தித்தார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 9)

18. அவரிடம் மூஸா (அலை), ‘உமக்கு வழங்கப்பட்டுள்ள ஞானத்தில் சிலவற்றை எனக்கு நீர் கற்றுக்கொடுப்பதற்காக நான் உம்மைப் பின்தொடர்ந்து வரலாமா?’ என்று கேட்டார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 9)

19. அதற்கு அவர் ‘என்னுடன் பொறுமையாக இருக்க உம்மால் இயலாது. எதன் நுட்பத்தை நீர் அறிய மாட்டீரோ அதனை எவ்வாறு நீர் பொறுத்துக் கொள்வீர்?’ என்றார். ஆனால் மூஸா (அலை), தான் பொறுமையாக இருப்பதாக உறுதியளித்தார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 9)

20. ஹிழ்ரு (அலை) அவர்கள், தம் செயலைப் பற்றி தாமாக சொல்லும்வரை, மூஸா (அலை) எந்தக் கேள்வியும்

கேட்க்ககூடாது என்று ஒப்பந்தம் செய்து கொண்டர்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 9)

21. அவ்விருவரும் தங்களின் பயணத்தை படகில் ஆரம்பித்தார்கள். ஹிழ்ரு (அலை) அப்படகில் ஒரு துளையிட்டார். “இந்த மோசமான செயலை ஏன் செய்தீர்” என்று மூஸா வினவினார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

22. ‘கேள்வி கேட்கக் கூடாது என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன் அல்லவா?’ என்று ஹிழ்ரு, மூஸாவை எச்சரித்தார். உடனே அதற்காக அவர் மன்னிப்பு கோரினார். பிறகு தங்கள் பயணத்தை தொடர்ந்தார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

23. பின்பு அவர்கள் நடந்து சென்றனர். வழியில் ஒரு சிறுவனைப் பார்த்தார்கள். ஹிழ்ரு (அலை) அவர்கள், அவனைக் கொன்றுவிட்டார்கள். அதற்கு மூஸா (அலை) ‘ஒரு பாவமும் அறியாத அப்பாவி பாலகனை கொன்றுவிட்டீரே?’ என்று கேள்வி எழுப்பினார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

---------------------------------------------------------------------